அளித்திருக்கிறார்கள். அதிலே இருக்கிற சிக்கலையும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சிக்கலெல்லாம் தீர்க்கப்பட்டு ஒருங்கிணைந்த நீதிமன்றம் செங்கல்பட்டிலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அதில் தொழிலாளர் நீதிமன்றம் இல்லாமல் இருக்கிறது. அந்த நீதிமன்றமும் வருவதற்கான ஏற்பாட்டை நம்முடைய அமைச்சர் அவர்கள் செய்வார்களா? அதேபோன்று திருக்கழுக்குன்றம் நீதிமன்றம் நீண்ட நாட்களாக வாடகைக் கட்டடத்தில் இங்கிக்கொண்டிருக்கிறது. அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கும் முயற்சி எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவரது கருத்தை எழுதிக் கொடுத்தால், நிதிநிலை அறிக்கையின்போது அதைப் பற்றி யோசிக்கலாம். (குறுக்கீடு) Assurance எப்படிக் கொடுக்க முடியும்? நீங்கள் எழுதிக் கொடுங்கள். எப்படியும் demand-ல் வரப் போகிறது. இரண்டு கேட்டிருக்கிறீர்கள். அதிலே ஒன்றாவது தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13. மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

13—

தகுதிச் சான்றிதழ்

***38000—திரு. மா. தண்டபாணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல ஆண்டுகள் இயக்கப்பட்ட கனரக வாகனங்களுக்குத் தகுதிச் சான்றிதழ் வழங்குவதற்கான விதிகளைக் கடுமையாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2008 நவம்பர் 12]

(அ) மற்றும் (ஆ) பல ஆண்டுகள் இயக்கப்பட்ட கனரக வாகனங்களுக்குத் தகுதிச் சான்று வழங்கும்போது கடுமையாக ஆய்வு செய்த பின்னரே, தகுதிச் சான்று வழங்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி.

திரு. மா. தண்டபாணி: மாண்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் சொல்கிற கருத்திலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லையென்றாலும், இன்றைக்கு கிராமப்புறங்களிலே ஓடுகிற அரை பாடி வண்டிகளையெல்லாம் பார்த்தால் நீண்டநாட்களாக ஓடியிருக்கிற, இயங்கிக்கொண்டிருக்கிற வண்டிகளாக இருக்கின்றன. அந்த வண்டிகள் வெளியிடுகிற புகையைப் பார்க்கிறபோது, சுற்றுச்சூழல் மாசு ஏற்படுகிற ஒரு சூழ்நிலை உருவாவதோடு மட்டுமல்ல; நிறைய விபத்துகள் எதனால் ஏற்படுகின்றன என்றால், இந்த வண்டிகள் மூலமாகத்தான் ஏற்படுகின்றன. ஆகவே, நம்முடைய மாண்பிற்குரிய அமைச்சர் அவர்கள் இதை ஆய்வு செய்து, சரி செய்ய வேண்டுமென்று தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Public Carrier and Private Carrier வண்டிகளையெல்லாம் ஆந்திர மாநிலத்தில் 7 ஆண்டுகளுக்கு மேல் இயக்கக் கூடாது என்று ஒரு சட்டமும், தமிழ்நாட்டிலே 8 ஆண்டுகளுக்கு மேல் இயக்கக் கூடாது என்று ஒரு சட்டமும் போடப்பட்டது. ஆனால், அந்தச் சட்டம் போடப்பட்ட பிறகு, அந்த வாகனங்களை வைத்திருக்கின்ற ஓட்டுநர்கள் எல்லாம் அரசிடம் முறையிட்டு, 'நாங்கள் இப்போதுதான் வாங்கினோம்; இதை உடனடியாக நிறுத்துங்கள் என்று சொன்னால், எங்களுக்கு பிழைப்பதற்கு வழியில்லை' என்று சொல்லி ஒரு மனுவை அளித்தார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்திலே கொண்டு, அந்தச் சட்டத்தை இப்போது நிறுத்தி வைக்கச் சொல்லி ஆணையிட்டார்கள்.

போக்குவரத்துச் சட்டம் மத்திய அரசினுடைய சட்டம். டெல்லியிலே இந்தச் சட்டத்தை மத்திய அரசு நீக்கிவிட்ட காரணத்தால்,

பழைய வண்டிகளை ஓட்டக் கூடாது என்று சொல்லுகின்ற அதிகாரம் நமக்கில்லை. ஆனால், அந்த வாகனங்களுக்கு Fitness Certificate என்று சொல்லப்படுகிற F.C. கொடுக்கின்றபோது, கடுமையான ஆய்வுகளைச் செய்து கொண்டிருக்கிறோம்.

குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், 2005 ஆம் ஆண்டில் 1,23,505 வாகனங்கள் F.C.-க்காக வந்தன. அதிலே 25,302 வாகனங்களை F.C. செய்யாமல், 'இது தகுதியில்லை' என்று நிறுத்தி வைத்திருக்கிறோம். அதேபோல, 2006 ஆம் ஆண்டில் 1,29,119 வாகனங்கள் வந்ததில், 26,836 வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. 2007 ஆம் ஆண்டில், 1,34,968 வாகனங்கள் வந்தபோது, 28,661 வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இப்போது அக்டோபர் மாதம் வரை 79,376 வாகனங்கள் வந்ததிலே, 15,479 வாகனங்களைத் 'தகுதியில்லை' என்று சொல்லி, அவற்றையெல்லாம் ஓட்டுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. மேலும், இவற்றால் சுற்றுச்சூழல் கெட்டுப் போய்விடும் என்று தெரிந்து, மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின்மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இப்போது தமிழ்நாட்டிலே மொத்தம் 53 R.T.O. அலுவலகங்கள் இருக்கின்றன. புதிதாக 5 அலுவலகங்கள் இப்போது தொடங்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே இருக்கிற 3 யூனிட் அலுவலகங்களை upgrade செய்து, அவை R.T.O. அலுவலகங்களாகத் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆக, 61 R.T.O. அலுவலகங்களிலும், F.C.-க்கு வாகனங்கள் வருகிறபோது, வாகனப் புகையிலிருந்து வெளிவரும் மாசின் அளவைக் கண்டுபிடிக்கிற கருவி வைக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற 46 யூனிட் அலுவலகங்களிலும், புதிதாகத் தொடங்கப்பட்ட 9 அலுவலகங்களிலும் புகையிலிருந்து வெளிவரும் மாசின் அளவைக் கண்டுபிடிப்பதற்கான Machine அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் சார்பில் சென்னையிலும், ஊட்டியிலும் அவர்களே தனியாக வைத்திருக்கிறார்கள். எனவே, வண்டி வருகின்றபோது, கடுமையான சோதனைகளையெல்லாம் நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம். அதை நிறுத்தச் சொல்லக்கூடிய அதிகாரம் நம்முடைய அரசுக்கு இல்லை. மத்திய அரசு புதிய சட்டம் இயற்றுமானால், அதை நிறுத்தச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி.

2008 நவம்பர் 12]

திரு. மா. தண்டபாணி: மாண்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்கு மிக்க நன்றி. அதேநேரத்தில், எனது தொகுதியில் இருக்கிற வேடசந்தூர் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையிலிருந்து இயக்கப்படுகிற அத்தனை பேருந்துகளும், 'மிக' என்று சொல்வதைவிட, 'மிக மிக' மோசமான பேருந்துகளாக இருக்கின்றன. நிறைய புதிய பேருந்துகளை விட்டுக் கொண்டிருக்கிற நம்முடைய அரசு, என்னுடைய தொகுதியிலும் கொஞ்சம் கவனம் செலுத்தி, புதிய பேருந்துகளை இயக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உங்கள் மாவட்டத்திலே, உங்களுடைய தலைமையிலேகூட 100 புதிய வாகனங்கள் இப்போது இயக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, மதுரை மண்டலத்தில், மதுரை போக்குவரத்துக் கழகத்திற்கென்று 1,000 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்து, 600-க்கும் மேற்பட்ட புதிய பேருந்துகள் கூண்டு கட்டி, இன்றைக்கு சாலைகளிலே வந்திருக்கின்றன. சென்ற வாரம் நாகர்கோவிலிலும், திருநெல்வேலியிலும், விருதுநகரிலும் இயக்கப்பட்டிருக்கின்றன. இன்னும், 20, 25 நாட்களுக்குப் பிறகு, மதுரையிலே 200 பேருந்துகளும், திண்டுக்கல்லிலே 100 பேருந்துகளும், தேனியில் 100 பேருந்துகளும் இயக்குவதற்காக அவை வடிவமைக்கப்பட்டு வருகின்றன. விரைவிலே திண்டுக்கல்லிலே புதிய பேருந்துகள் இயக்கப்படும். அப்போது திரு. மா. தண்டபாணி அவர்களுடைய வேடசந்தூர் தொகுதியிலும் அவை இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

முற்பகல் 9-55

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது முறையாக கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, கிராம மக்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம் mini bus என்ற சிறு பேருந்து ஆகும். அந்தப் பேருந்துகளினுடைய நிலைமை தற்போது பரிதாபமாக இருக்கிறதென்று பல்வேறு தரப்பினரும் கூறுகிறார்கள். Interlinked distance 4 கி.மீ. என்ற வகையிலே

அவை அனுமதிக்கப்பட்டன. ஆனால், அனுமதிக்கப்பட்ட அத்தனை பேருந்துகளும் இயங்குகின்றனவா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை. நஷ்டத்திலே சிலபேர் பேருந்துகளை நிறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, அதற்கு மீண்டும் புத்துயிரூட்டி mini bus-ளை இயக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, mini பேருந்து என்பது நம்முடைய முதலமைச்சர் கொண்டு வந்த புதிய திட்டம். தமிழ்நாடு முழுவதும் ஒரு மாவட்டத்திற்கு 250 பேருந்துகள்வரை விட வேண்டுமென்று கணக்கிடப்பட்டு, 7,500 பேருந்துகள் தமிழ்நாடு முழுவதும் விட வேண்டுமென்று அரசாணை வெளியிட்டு, 3,000 பேருந்துகள் தமிழ்நாட்டிலே இயக்கப்பட்டன. அப்படி இயக்கப்பட்டபோது 4 கி.மீ. served area-வும், 16 கி.மீ. unserved area-வும் இருக்க வேண்டுமென்பது அடிப்படைத் தகுதியாக வைக்கப்பட்டு அவர்களுக்கெல்லாம் உரிமம் வழங்கப்பட்டது. அப்படி வழங்கப்பட்டபோது ஒரு mini bus-னுடைய owner மதுரை கிளை உயர் நீதிமன்றத்திலே ஒரு வழக்கு தொடுக்கிறார். இது unserved area-விலே இயக்குகிற காரணத்தால் ஒரு mini bus permit தந்தாலே அடுத்த bus-க்கு தரமுடியாது. ஏற்கெனவே அது served area ஆக ஆகிவிட்டதென்று சொல்லி தடையாணை பெற்றுவிட்டார். அதனால்தான் மேற்கொண்டு புதிதாக mini பேருந்துகளைவிட நாம் அனுமதி கொடுப்பதற்குத் தடையாணை உயர் நீதிமன்றத்திலே இருக்கிற காரணத்தால் கொடுக்க முடியவில்லை. அதை எதிர்த்து கோர்ட்டுக்குப் போவதற்குப் பதிலாக, ஒரு புதிய திட்டத்தை நம்முடைய அரசு கொண்டு வந்தது. ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் எந்தெந்தப் பகுதிகளுக்கு mini பேருந்து தேவை என்று கண்டறிந்து தருவார்களேயானால் ,அந்தப் பகுதிகளிலே இயக்கலாம் என்று ஒரு புதிய சட்டத்தை நம்முடைய அரசு கொண்டு வந்தது. அதிலே எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஆய்வு செய்து, 232 வழித் தடங்களிலே கிட்டத்தட்ட 350 பேருந்துகளை வழங்கலாம் என்று சொன்னார்கள். அப்படி 350 பேருந்துகளை வழங்கினால்கூட மேலும் 3,400 பேருந்துகள் தரப்பட வேண்டியிருக்கிறது. இதற்கு ஏற்கெனவே 600 mini பேருந்து உரிமையாளர்கள் நீதிமன்றம் சென்று அனுமதி வேண்டுமென்று நீதிமன்ற ஆணை பெற்றிருக்கிறார்கள். 200-க்கும் மேற்பட்ட

2008 நவம்பர் 12]

mini bus உரிமையாளர்கள் spare bus வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இப்படி பல சங்கடங்களும், நீதிமன்றத் தடையாணையும் இருக்கின்ற காரணத்தால்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு கூட்டுக் கூட்டம் கூட்டி உள் துறை செயலாளர், மற்றவர்களையும் அழைத்து, அனைவருக்கும் தருவதுபோல ஒரு திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று இப்போது அவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. வெகுவிரைவிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று தமிழகம் எங்கும் mini பேருந்துகளை இயக்குகின்ற பணியை இந்தத் துறை செய்யும். இதில், 4 கி.மீ. unserved area, 16 கி.மீ. served area என்று இருந்ததை, முந்தைய அரசு 8 கி.மீ. served area என்று கொண்டு வந்தார்கள். அதை எதிர்த்து நீதிமன்றம் சென்றுவிட்டார்கள். அதிலேயும் ஒரு நீதிமன்றத் தடையாணை இருக்கிறது. இப்படி பல தடையாணைகள் இருக்கின்ற காரணத்தால் விரைவில் நல்லதொரு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய கன ரக வாகனங்களால் விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே, அவற்றிற்குத் தகுதிச் சான்றிதழ் வழங்கும்போது, புதிய வண்டிகளுக்குச் சிவப்பு முக்கோண ஒளிப்பான் பொருத்தினால்தான் அனுமதி வழங்குவதைப்போல, பழைய கன ரக வாகனங்களுக்கும் சிவப்பு முக்கோண ஒளிப்பான் அமைக்க அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை ஆய்வு செய்து அதற்கு உரிய அரசாணையை வெளியிடலாம். முறைப்படி நிதித் துறையினுடைய ஆணையையும், அதேபோல முதல்வர் அவர்களுடைய ஆணையையும் பெற்று, அதைப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.